# மாதிரி வினாத்தாள் - 2019-2020
# SAMPLE QUESTION PAPER -2019-2020

**பன்னிரண்டாம் வகுப்பு** **மொத்த மதிப்பெண்கள் :80**

**[ XII –STD ]** **Maximum marks: 80**

**தமிழ்** **கால அளவு;3 மணி**

**TAMIL** **Time Allowed: 3 hours**

---

**பகுதி –அ** **( 40 மதிப்பெண்கள் )**

**(Section:A )** **( 40 marks)**

**1.(அ) <u>கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக</u>.** 4 x 1= 4

I. ஆருவது சினம் என்று ஆறு முரை எழுதினான்.
II. நோயற்ற வாள்வே குறைவற்ற செழ்வம்.
III. அறிவு பனிவையும் அரியாமை ஆணவத்தையும் தரும்.
IV. தூரத்துப் பச்சைக் கன்னுக்குக் குழுமை.
V. அறசன் எவ்வழி குடிகள் அவ்வலி.
VI. பொருத்தார் பூமி ஆழ்வார் என்பது பழமொழி.

**ஆ. <u>கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக</u> .** 4 x 1= 4

I. வெள்ளி பனி மலை மீதுலாவுவோம்;மேலை கடல் முழுதும் கப்பல் விடுவோம்
II. கண்ணுக்கு கருணை அழகு; கவிதைக்கு கற்பனை அழகு.
III. தண்ணீர் பாம்பை பார்த்து நல்ல பாம்பு என்று நினைத்துவிட்டேன்.
IV. பாடா தேனீக்கள் பசியா வயிறு உலவா தென்றல் கண்டதுண்டோ?
V. மலர் தோட்டத்தின் அருகே தயிர் குடம் எடுத்து சென்றாள் மலர்விழி.
VI. எட்டு கால் பூச்சியை பார்த்து பத்து தலை இராவணன் பயப்படமாட்டான்.

**இ. <u>கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக</u>..** 4 x 1= 4

I. அன்னைத் தமிழை அழகுறக் கற்க வேண்டும். [பிறவினை ஆக்குக ]

II. கம்பரை யாவரும் அறிவர் .[பொருள் மாற்றாது எதிர்மறைத் தொடர் ஆக்குக]

III. கோதை தான் திருப்பாவை பாடுவதாகக் கூறினாள் [நேர் கூற்றாக்கு

IV. கைகேயி தசரதனிடம் வரம் பெற்றாள் .[ செயப்பாட்டு வினைத் தொடராக்குக]

V. வளவன் வண்டி மாடுகளுடன் ஓடினான். [பிறவினை ஆக்குக ]

VI. பாண்டியர் சங்கம் கண்டனர் ;பாண்டியர் தமிழ் வளர்த்தனர் [தொடர் வாக்கியம் ஆக்குக ]

**2. (அ). பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.** **[5]**

அண்டார்ட்டிகா தவிர உலகின் எல்லா இடங்களிலும் எலிகள் வாழ்கின்றன. சில இனங்கள் தரையிலும், சில பூமிக்கடியில் வளைகளிலும் மற்றும் சில மரங்களிலும் வாழ்கின்றன. சில எலிகள் குளிர்காலம் முழுவதும் தூங்காமல் வாழ்கின்றன.எலிகள் சுண்டெலியைவிடப் பெரியவை. எலிகளின் கால்களில் ஐந்து விரல்கள் உண்டு. உடலில் முடி நிறைந்திருக்கும், மீசை உண்டு, கடினமான வால் உள்ளது. சுமாரான பார்வைத்திறன் உண்டு. மரம், பிளாஸ்டிக், அலுமினியம், காரீயம், தாமிரம் போன்றவற்றைக் கடிக்கும் அளவுக்குக் கூர்மையான பற்கள் உண்டு. தான் வாழும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு எலிகளின் நிறமும் எடையும் வேறுபடும். எலிகள் தினந்தோறும் அவற்றின் எடையில் ஐந்து முதல் இருபது சதவீதம் வரை சாப்பிடுகின்றன

எலிகளுக்கு வலிமையான தாடைத் தசை உள்ளது. ஒரு ஜோடி வெட்டும் பற்கள் உள்ளன. வருடத்திற்கு 12 செண்டிமீட்டர் வீதம் வாழ்நாள் முழுதும் அவற்றின் பற்கள் வளர்த்துக்கொண்டே இருக்கும். பற்களின் மேல் உள்ள பற்பூச்சு வலிமையானது. அதனால்தான் உலோகம் போன்ற கடினப் பொருள்களையும் எலியால் எளிதாகக் கடிக்க முடிகிறது.

உலகின் பல பகுதிகளில் எலிகளைச் சாப்பிடுகிறார்கள். பெருச்சாளியில் புரதச்சத்து இருப்பதால் விரும்பி உண்கிறார்கள். வயல் பக்கம் கிடைக்கும்

வெள்ளை எலி அநேக மக்களால் உண்ணப்படுகிறது. எலியை உணவுக்காக வியாபாரரீதியாக வளர்கின்றனர். கானா, பிலிப்பைன்ஸ், வியத்நாம், தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் எலியை உண்கின்றனர். வளர்ப்பு பிராணிகளுக்கும் எலி உணவாகக் கொடுக்கப்படுகிறது.

வினாக்கள்:

I. எலிகளின் பல் வளர்ச்சி குறித்து எழுதுக.

II. எலிகளின் உருவத் தோற்றம் குறித்து எழுதுக.

III. எலிகள் எங்கு வாழ்கின்றன?

IV. எலியைச் சாப்பிடும் நாடுகள் எவை?

V. உலோகங்களையும் எப்படி எலியால் கடிக்க முடிகிறது?

**(ஆ ) தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள முயற்சி குறித்து குடிநீர் வடிகால் ஆணையரை நேர்காணல் செய்க.** [5]

**[ அல்லது ]**

**பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.**

"புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்
பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம்
இதுஎனது என்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
ஒருபொருள் தனதெனும் மனிதரைச் சிரிப்போம்".

**<u>வினாக்கள்:</u>**

i. எதனை வேரொடு சாய்க்க வேண்டும்? 1
ii. எதனை உயிரென்று காக்க வேண்டும்? 1
iii. இதயத்தை எதில் நனைத்திட வெண்டும்? 1
iv. எக்கொடுமையைத் தவிர்க்க வேண்டும்? 1
v. யாரை நோக்கி நகைக்க வேண்டும்? 1

**3 . <u>கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக.</u>** **[10]**

i. நெகிழி தவிர்த்து உலகை நிமிர்த்து..
ii. மழைநீர் உயிர்நீர்
iii. ஒழுக்கம் விழுப்பம் தரும்.

4. <u>பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.</u> [8]

i..உங்கள் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி செய்து தருமாறு மாநகராட்சிக்குக் கடிதம் வரைக.

ii. சமூக ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்தும் முறையைப் பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[எக்கடிதமாயினும் உம் முகவரி ப.தமிழ்நம்பி / ப.தமிழ்நங்கை 30.தாடிக்காரசாமி தெரு, ஆலந்தூர், சென்னை-16 எனக் கொள்க ]

## பகுதி –ஆ (40 மதிப்பெண்கள்)
## (section:B) (40 marks)

5. **கீழ்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** [ 3×5=15 ]

I. கலை முழுமை அடைவது எப்போது. ?
II. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எழுதுக.
III. தமிழ் இலக்கியத்தில் காணப்படும் தந்தைவழி குடும்பம் குறித்து எழுதுக.
IV. படத்தொகுப்புப் பணி திரைப்பட ஆக்கத்தில் பெறும் சிறப்பிடம் குறித்து எழுதுக.
V. சென்னையின் தொன்மை குறித்து மதரஸாப்பட்டினம் உரைப்பன யாவை?

6. **கீழ்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** [ 2×5= 10 ]

i. இராமன் பரிவுடன் சவரியிடம் வினவியதும் அதற்குச் சவரி உரைத்த மறுமொழியும் குறித்து எழுதுக.
ii. இராமலிங்கர் கந்தவேளிடம் எவற்றையெல்லாம் வேண்டுகிறார் ?
iii. நாட்டிய அரங்கின் அமைப்புக் குறித்துச் சிலப்பதிகாரம் உரைப்பன யாவை?
iv..வெகுளாமை குறித்து வள்ளுவத்தின் கருத்து யாது?

7 . **கீழ்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளி.** [5]

"மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவைப் படிவன வீழ கறவை
கன்றுகொள ஒழிய கடிய வீசி
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள் "

**வினாக்கள்:**

i. இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது? 1
ii. ஆசிரியர் யார்? ? 1
iii. இச்செய்யுள் எத்திணையைச் சார்ந்தது? 1
iv. இச்செய்யுள் எத்துறையைச் சார்ந்தது? 1
v. கூதிர்காலம் எம்மாதங்களில் வரும்? 1

(அல்லது )

" குகனோடும் ஐவர் ஆனோம்
முன்பு;குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்"

**வினாக்கள்:**

i.. இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்? 1
ii. இவ்வரிகள் இடம் பெற்ற காண்டம் எது? 1
iii. இவ்வரிகள் யார் கூற்று? 1
iv. நால்வர் ஐவர் ஆனது எப்படி? 1
v. குன்று சூழ்வான் மகன் யார்? 1

**8.** 'முதல்கல்' சிறுகதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. [10]

அல்லது

'தலைக்குளம்' சிறுகதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

---------------------------------------